# DEPOSITION OF WITNESS
# (Chapter XXIII code of Criminal Procedure)

## IN THE COURT OF PRINCIPAL DISTRICT AND SESSIONS JUDGE AT TIRUVALLUR

## VAC No. 23 / 2025

| Deposition of Witness for | Prosecution PW3<br>Defence<br>Court |
|---|---|

| | | |
|---|---|---|
| Name | : | Thiru. Mohanarangan |
| Father / Husband Name | : | |
| Village | : | |
| Taluk | : | |
| Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 23rd day of January, 2026.

**(Accused is present.)**

<u>சாட்சி சத்தியப்பிரமானம் செய்விக்கப்பட்டு அரசுத் தரப்பில் முதல் விசாரணை செய்ய அனுமதிக்கப்படுகிறார் :</u>

**முதல் விசாரணை :**

நேரம் 15.05 மணி

நான் தற்போது கொசஸ்தலை ஆற்று வடி நில உதவி கோட்டம் நீர்வள ஆதார துறை அலுவலகத்தில் உதவியாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 22-02-2021 அன்று காலை 10.00 மணியளவில் நான் அலுவலகத்தில் பணியில் இருந்தபோது என்னுடைய தலைமை அலுவலர் ஊழல் தடுப்பு மற்றும்

கண்காணிப்பு துறையிலிருந்து B மற்றும் C பிரிவு அலுவலர் ஒருவரை தேர்ந்தெடுத்து ஒருவரை அனுப்புமாறு கேட்டுக்கொண்டதாகவும் அதற்கு என் பெயரை சொல்லி என்னை அனுப்புவதாக அது சம்பந்தமாக எனக்கு கடிதம் கொடுத்து, அந்த கடிதத்தை எடுத்துக்கொண்டு ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு துறை அலுவலகத்திற்கு காலை 10.30 மணியளவில் சென்றேன். அந்த கடிதம் **அ.த.சா.ஆ.5** ஆக குறியீடு செய்யப்படுகிறது. காவல் ஆய்வாளர் திரு. கார்த்திக் அவர்களை மேற்படி கடிதத்தை கொடுத்தேன். என்னைபோல் மற்றொரு அரசு அலுவலரையும் நியமித்திருந்தார்கள். அதன்பிறகு அவரும், நானும் பேசிக்கொண்டிருந்தோம். நீங்கள் எதற்காக வந்தீர்கள் என்று கேட்டபோது புகார்தாரர் சுரேஷ் மின் இணைப்பு பெறுவதற்காக லோகநாதன் லஞ்சம் கேட்டதாக கூறினார். அப்போது அங்கு சுரேஷ் இருந்தார். ஆய்வாளர் கார்த்திக் சுரேஷ் அவர்களையும், மற்றொரு அரசு சாட்சியையும் அறிமுகப்படுத்தி வைத்தார். புகார்தாரர் புதிய மின் இணைப்பு பெறுவதற்காக லோகநாதன் லஞ்சமாக ரூபாய் 5 ஆயிரம் கேட்டதாக கூறினார். புகார்தாரர் கொடுத்த புகாரையும், முதல் தகவல் அறிக்கையையும் படித்து பார்த்து அதில் கையொப்பமிட்டேன். நான் புகாரை படித்து பார்த்ததற்காக புகாரின் முதல் பக்கத்தில் உள்ள முதலாவதாக கையொப்பம் செய்தேன். என்னுடைய கையொப்பம் மட்டும் **அ.த.சா.ஆ.6** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அதேபோல் முதல் தகவல் அறிக்கையையும் படித்து பார்த்தேன்.

நான் முதல் தகவல் அறிக்கையை படித்து பார்த்ததற்காக முதல் தகவல் அறிக்கையை முதல் பக்கத்தில் முதலாவதாக கையொப்பம் செய்தேன். முதல் தகவல் அறிக்கையில் உள்ள என்னுடைய கையொப்பம் மட்டும் **அ.த.சா.ஆ.7** ஆக குறியீடு செய்யப்படுகிறது. மேலும் Demo காட்டவேண்டும் என்று கூறினார். பின்னர் ராஜா என்பவரை அழைத்து ஒரு தூய்மையான கண்ணாடி டம்ளர் எடுத்து வந்தார். அதில் Sodium Carbonate போட்டார்கள். லோகநாதனுக்கு கொடுக்க வேண்டிய பணத்தை வைத்திருக்கிறீர்களா என்று ஆய்வாளர் சுரேஷிடம் கேட்டார். ஆய்வாளர் அந்த பணத்தை பெற்று மற்றொரு அரசு ஊழியர் உத்திராதியிடம் 10 x 500 தாள்கள் கொடுக்கப்பட்டு மொதம் ரூபாய் 5000

கொடுத்து உத்திராதியை எண்ணுமாறு கூறினார். அவரும் அதை எண்ணி பார்த்தார். எண்ணி பார்த்தபிறகு சரியாக உள்ளது என்று ஆய்வாளரிடம் கொடுத்தார். பின்னர் ஆய்வாளர் உத்திராதியை அவர் கையால் எண்ணி பார்த்ததை கரைசலில் கையை விடுமாறு கூறினார். உத்திராதியின் கரைசலில் விட்டபோது தண்ணீரின் நிறம் மாறவில்லை. பின்னர் வெள்ளையாக ஒரு பவுடரை ரூபாய் தாளில் ராஜா என்ற காவலரை தடவுமாறு ஆய்வாளர் கூறினார். உத்திராதியிடம் அந்த தாள்களை திரும்ப கொடுத்து எண்ணி பார்க்க கூறினார். அதை அவர் எண்ணி பார்த்தார். அந்த பணத்தை திரும்ப புகார்தாரர் சுரேஷின் வலது பக்க பேண்ட் பாக்கெட்டில் வைக்க கூறினார். அதை புகார்தாரர் தனது வலது பேண்ட் பாக்கெட்டில் வைத்துக் கொண்டார். பின்னர் உத்திராதியின் கையை கரைசலில் நனைக்க கூறினார். அவர் அவ்வாறு நனைத்த போது கரைசல் இளம் சிவப்பாக நிறமாக மாறியது.

**வழக்கு சொத்துக்கள் தலைமை குற்றவியல் நீதிமன்றத்திலிருந்து இன்னும் வரப்பெறாததால் வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது.**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct.

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.